
ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அனுகிரகத்துடன்
காஞ்சீபுரத்தில் சங்கரா செவிலியர் கல்லூரி (மகளிர்) 2021-22ம் ஆண்டில் துவங்கப்பட்டது.



## அருளாசி



இக்கல்லூரி உங்களுக்கு சிறந்த கல்வி அறிவையும், பயிற்சி திறனையும் அளிக்கும். இதன் மூலம் நீங்கள் புதிய தொழில் நுட்பங்களை தெரிந்து கொண்டு மனித நேய பயிற்சிகளை அறிந்து கொள்ள வேண்டும். தொழில்நுட்ப அறிவு, சமயோஜித புத்தி அறிந்து கொண்டு செவிலியர் சேவையை பொறுமையாகவும், பொறுப்பாகவும் அயராது சோர்வில்லாது ஒரு முகத்தன்மையோடு, காருண்யத்தோடு பொதுமக்களுக்கு சேவை செய்ய வேண்டும். உங்களது உழைப்பு, திறமை, பக்குவம் இம் மூன்று செயல்களையும் ஒருங்கிணைந்து செயல்படுத்த வேண்டும். நீங்கள் பொது மக்களுக்கும், மருத்துவர்களுக்கும் இணைப்பு பாலமாக இருக்க வேண்டும். உங்களுடைய வாழ்க்கையில் சில சமயம் கஷ்டங்கள், நஷ்டங்கள் ஏற்பட்டாலும் அதையும் பொறுத்துக்கொண்டு நோயாளிகளை ஸ்வஸ்தப் படுத்துவதிலே மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இத்துறையில் வேலை வாய்ப்புகள் பல வகையில் உள்ளன. அந்த வேலை வாய்ப்புகளை சரியாகவும் கவனமாகவும் உபயோகப்படுத்திக் கொண்டு உங்கள் குடும்பத்திற்கும், ஸ்தாபனத்திற்கும் பெருமைசேர்க்க வேண்டும். உங்களுடைய வாழ்க்கையிலே அருளும் பொருளும் கூடி அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும் அன்னை காமாட்சி அருளை பெற்று வளமாக வாழ்ந்திட ஆசீர்வதிக்கிறோம்.

ஜய ஜய சங்கர... ஹர ஹர சங்கர...

---

பூஜ்யஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் 10.03.2022 அன்று ஓரிக்கையில்
முதலாம் ஆண்டு மாணவிகளுக்கு வழங்கிய ஆசியுரை.